

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம், பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் உத்திரமேரூர் கே.எம்.ஆர் பேருந்து நிலையம் அருகில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பொதுக்குழு உறுப்பினர் சசிகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள், முன்னணியினர் கலந்துகொண்டனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, ஆலந்தூர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற சிலம்பம் போட்டியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்து, வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! எம்.எஸ்.பாபு வரவேற்புரை!

# இலத்தூர் தெற்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

### டி.கே.எஸ். இளங்கோவன் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன் 26-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க., இலத்தூர் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (26.6.2023, திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, திரௌபதி அம்மன் திடல், செய்யூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார். ஒன்றியச் செயலாளர் எம்.எஸ்.பாபு அனைவரையும் வரவேற்கிறார்.

க.மணி, ப.பத்மநாபன், க.அர்சுணன், ஜெயலட்சுமி மகேந்திரன், ஜெ.மகா கணபதிராமன், எஸ்.டில்லிபாபு, ஏ.வெங்கடேசன், ஆர்.பன்னீர் செல்வம், கிருஷ்ணவேணி, தணிகாசலம், மோகனா கோபிநாத், லோகாம்பிகை ராசமாணிக்கம், ஆர்.திவாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக செய்தித்தொடர்புத்தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் க.செல்வம் எம்.பி., எஸ்.இனியரசு, ப.அப்துல்மாலிக், ஆர்.தசரதன், ஆர்.டி.அரசு, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ். கே.இராஜேந்திரன், செம்பருத்தி துர்கேஷ், சுபலட்சுமி பாபு, ஆர்.ராமமூர்த்தி, பி.சுரேஷ், பி.சத்தியபாமா, எஸ்.வி.மகேந்திரன், புதுப்பட்டு மு.மோகன்தாஸ், வெ.இரங்கநாதன், த.பாபு, மு.தணிகாசலம், என்.இராசமாணிக்கம், எஸ்.மோகன், ஜெ.செல்வி, எஸ்.சத்திய நாராயணன், ஆர்.கார்த்திக், எம்.பி. கதிரவன், பி.ஜெயசூரியா, செ.தென்னக செல்வன், கே.குப்பம்மாள், என். கார்த்திகேயன், கோ.கோபிநாத், எம்.தில்லை வில்லாளன், என்.பொற்செல்வன், ஆ.பர்வதம் வரதன், வி. செல்வகுமார், மு.சீனிவாசன், ராணி பாண்டுரங்கன், சித்ரா ராஜேந்திரன், சுஜாத்தா பாரதிபாபு, ரா.வேலாயுதம், சி.சசிகுமார், மு.திருநாவுக்கரசு, ஜெ.சுந்தரி ஜனார்த்தனன், சுதா வாசு, ஜெ.இளவரசி ஜனார்த்தனன், செ.ஆர்த்திசெல்வம், காந்திமதி ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

தி.அருண்மொழிவர்மன் நன்றி கூறுகிறார்.

# சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னைத் தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு, மேற்கு, மத்தியப்பகுதி மற்றும் தாமஸ் மலை ஒன்றியக் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் இன்று (26.06.2023) திங்கட் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில், துரைப்பாக்கம் பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் அமைந்துள்ள பி.ஆர்.பேலஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அமைப்பாளர், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற கிளைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்**: உறுப்பினர் சேர்க்கை மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

(குறிப்பு: நிர்வாகிகள், தாங்கள் இதுவரை சேர்த்து தலைமைக் கழகத்தில் ஒப்படைத்துள்ள உறுப்பினர் படிவங்களுக்கான கட்டண இரசீதை எடுத்து வரவும்.)

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னைத் தெற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சொ. துரைசண்முகம்
## ஜூன் 26 (2014)



**இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.**

**அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### வரும் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்தாவிட்டால் இதுதான் ‘நாட்டின் கடைசி பொதுத்தேர்தல்’ என்பதை மறவாதீர்!

# பா.ஜ.க.வை வீழ்த்த பாட்னாவில் 16 கட்சிகளின் முடிவு - வெற்றிக்கான வெளிச்சம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 26-

தமிழ்நாடு முதலமைச்சரின் முத்தான மூன்று யோசனைகள் சிறப்பானவை. பயன் தரும் மருந்து. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வே.

பாசிச பா.ஜ.க.வை வரும் மக்களவைத் தேர்தலில் வீழ்த்திட பீகார் தலைநகரமான பாட்னாவில் 16 கட்சிகளின் தலைவர்கள் கூடி முடிவெடுத்திருப்பது வெற்றிக்கான வெளிச்சம். தமிழ்நாடு முதலமைச்சரின் மூன்று யோசனைகள் ஆக்கப்பூர்வமான முத்தாய்ப்பானவை. பா.ஜ.க.வை வீழ்த்திட “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வே” என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் 16 முக்கிய எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் (இதில் தற்போதுள்ள ஆறு முதலமைச்சர்களும் அடங்குவர்) ஒன்றுகூடி, வருகின்ற 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் குறித்து ஆலோசித்துள்ளனர். அரசமைப்புச் சட்ட விதி நெறிகளையும், ஜனநாயகத்தையும் சீர்குலைத்து, இந்திய ஜனநாயகத்திற்கு விடை கொடுத்துவிட்டு, மக்கள் விரோத ஆட்சியை மூன்றாம் முறையாகவும் அமைக்க முனைந்து, எதேச்சதிகார பாசிசத்தை சிம்மாசனத்தில் அமர்த்தி. ஆள வைக்கும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வைத் தோற்கடிக்க சிறப்பான வியூகம் வகுக்கக் கூடியது காலத்தின் கட்டாயமாகும்.



**பொது எதிரியை வீழ்த்துவதே ஒரே குறி!**

அக்கட்சிகளிடையே பல கருத்து மாறுபாடுகள், அணுகுமுறை வேறுபாடுகள் இருந்தாலும், பொது எதிரியை வீழ்த்த ஒன்று திரள்வது தவிர்க்கக்கூடாத ஒன்று என்பதை உணர்ந்து ஒன்று திரண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி கடந்த பல ஆண்டுகளாக அனைத்து முக்கிய கட்சிகளையும் ஓர் கூட்டணியில் கொள்கை அடிப்படையில் ஒன்று சேர்த்து வைத்து, மூன்று தேர்தல்களை (நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மன்றம்) சந்தித்து பெற்ற வெற்றி மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளது; இந்தியாவிற்கே ‘திராவிட மாடல்’ ஆட்சித் தலைமை ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுவதோடு பாசிச எதிர்ப்பு அறப்போர் அரசியல் தளத்தில் ஒரு கூட்டணி அமைத்து நின்று வென்று காட்ட முடியும் என்பதை நம்பிக்கையுடன் விதைத்திருப்பது நல்ல முன்னோட்டமாக அமைந்துள்ளது. சரியான அறச்சீற்றம். பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், தேஜஸ்வி ஆகியோரின் சீரிய முயற்சி இடையறாத சந்திப்புகள் சிறந்த பலனைத் தந்துள்ளன நன்றி கூறுகிறோம்!

**நமது பாராட்டும் – வாழ்த்தும்!**

கலந்துகொண்ட அத்துணைத் தலைவர்களும் ஒரே பொதுநோக்கோடு, ஒற்றை இலக்கோடு, தங்களை எது பிரிக்கிறதோ அதைத் தள்ளி வைத்து, தங்களை எது இணைக்கிறதோ அதனையே முன்னிலைப்படுத்தி, இந்த முதல் கட்ட முயற்சியிலேயே வெற்றியின் வெளிச்சத்தை விடியலுக்கான சரியான வினைத்திட்பத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அனைத்துத் தலைவர்களுக்கும் நமது பாராட்டும் - வாழ்த்தும்.

பலூன் போன்று ஊதியுள்ள பண பலம், பத்திரிகை பலம், முரட்டு ஆள் பலம் எல்லாம் கொண்டதாக உள்ள ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஆட்சியை அகற்ற தக்க மூளை பலம் (Mind Power) பயன்படுத்தினால் வெற்றி சாத்தியமாவது உறுதி.

**தமிழ்நாடு முதலமைச்சரின் ஆக்கப்பூர்வமான மூன்று யோசனைகள்!**

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு பொதுத் திட்டம் ஜனநாயகம் மீட்பு மதச்சார்பின்மை சமூகநீதிகளுக்குப் பாதுகாப்பு வெறுப்பு அரசியலுக்கு விடை மனித உரிமை நிலைத்தல் உண்மையான குடியரசு தழைத்தல் இவற்றை முன் திட்டமாக்கி, இப்போதிருந்தே விரைவில் முடிவு எடுத்து, களப் பணியில் தீவிரப் பிரச்சாரத்தில் இறங்கிவிடவேண்டும்.

நமது முதலமைச்சர் பீகாரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று சென்னை விமான நிலையத்தில் நேற்று (23.6.2023) அளித்த பேட்டியில் வெளியிட்ட கருத்து ஆக்கப்பூர்வமான செயல் திட்டம் நமது நோக்கமும்கூட.

1. எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல் ஆட்சி’ அதன் தலைமையில் ஒற்றை இலக்குக் கூட்டணி.

2. அது இயலாவிட்டால், தொகுதி உடன்பாடு; பா.ஜ.க.வுக்கு எதிராக பலமான ஒரு வேட்பாளர்.

3. அதுவும் முடியாவிட்டால், பொது வேட்பாளர் அறிவித்து ஒன்றுபட்ட தேர்தல் பணி.

இந்த முறையில்தான், தீயணைப்பதில் எப்படி ஒரே நோக்கம், இலக்கு உண்டோ, அதுபோன்று ஒரு நடைமுறையை விரைவில் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!**

16 கட்சிகள் கூடி ஒருங்கிணைந்துள்ள நிலையில், தன்முனைப்புக்கு இடமின்றி, நாட்டு நலன் ஜனநாயக மீட்புபற்றி மட்டுமே சிந்தித்து, மற்றவற்றைப் பின்னே தள்ளிவிட வேண்டும்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு!”

இன்றேல், பல தலைவர்கள் சுட்டிக்காட்டி வருவதுபோல், இதுதான் (2024) கடைசி பொதுத் தேர்தல் என்றாகிவிடும். ஆபத்து தவிர்க்க முடியாத கடுஞ்சோதனையாகிவிடும் என்பதைத் தலைவர்கள் சிந்திக்க; செயலாற்றுக.

மக்கள் தயாராகி உள்ளனர். - தலைவர்களே, நீங்கள் தயாராகுங்கள்.

இவ்வாறு அறிக்கையில் வீரமணி கூறியுள்ளார்.

### கி.தேவன் தலைமை ! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

# 41வது வட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் ! நலஉதவிகள் !

### இளையகோபால் சிறப்புரை ! தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை ஜூன்:26

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 41வது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (26.06.2023 திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் வைத்தியநாதன் சாலை, தண்டையார்பேட்டையில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் கி.தேவன் தலைமை வகிக்கிறார். ஆர்.கே.நகர் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மாஸ். டி.வெங்கடேசன், மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி. திராவிட செல்வி, பி.சீனிவாசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம். வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், டி.சங்கர், இ.ரவிக்குமார், பா.வேதாச்சலம், எஸ்.சொக்கலிங்கம், ஜி.ராஜா, மீஞ்சூர் முகுந்தன், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, எஸ்.எம். பரசுராமன், ஆகிரோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.குணசேகரன், கி.தனலட்சுமி, ப.தேவராஜ், கே.அரிபாபு, ஜி.உமா, பி.தன்ராஜ், இ.ரங்கநாதன், கே.முரளி, கே.காளிதாஸ், நீலிமா ரவிக்குமார், டி.விமல், ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் இளையகோபால் சிறப்புரையாற்றுகிறார். மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.

இதில் நாகம்மை கருப்பையா, பா.மணியம்மை, தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன், பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏ.டி.மணி, ஏ.மணிமேகலை எம்.சி, வட்டச் செயலாளர்கள்: எஸ்.எல்.சுந்தர், ஆர்.எ. எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், மா.நாகராஜ், நா.கோதண்டன், ச.தமிழ்செல்வன், ப.குமார், பொ.து.ராஜா, வீ.வடிவேல், டாக்டர். வை.கலைவாணன், என்.மருதுகணேஷ், ஆர்.பொன்இளவரசன், ஏ. கோவிந்தசாமி, தீனதயாளன், ஏ.ரமேஷ்பாபு, ப.சோமசுந்தரமூர்த்தி, எம். விமலா, எஸ்.சுசிலா, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

முருகேசன், நரேந்திரகுமார், ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### மொழிப்போர் தியாகி

# க. இளமதி நூற்றாண்டு விழா! மயிலை த.வேலு நல உதவிகள் வழங்கினார்!

### தலைமை: மு.இ.ஏழுமலை! முன்னிலை: நந்தனம் கி. மதி !

சென்னை, ஜூன் 26-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா காணும் நூற்றாண்டில்,

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. 88-வது முன்னாள் வட்டச் செயலாளர், மொழிப்போர் தியாகி க.இளமதி (1924-2023) அவர்களின் நூற்றாண்டு துவக்க விழா நேற்று (25.6.2023) 123 வட்ட கழகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர், 121 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி முன்னிலையில், 123 வது வட்டச் செயலாளர் மு.இ. ஏழுமலை தலைமையில், 300 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி,

மொழிப்போர் தியாகி க. இளமதி அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் பூதூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், 123 வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2 / BLC பாக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், மொழிப்போர் தியாகி இளமதி குடும்பத்தினர் கிருஷ்ணவேணி தட்சிணாமூர்த்தி தா புகழேந்தி குமார் தா இளங்கோவன் தா வசுமதி. Wefas த. பத்மநாபன் மொழிப்போர் தியாகி க. இளமதி / பட்டம்மாள் பேரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரிக்கொம்பன் யானை

# ஆரோக்கியமாக நலத்துடன் உள்ளது!

### வனத்துறை துணை இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 26-

“அரிக்கொம்பன் யானை நல்ல ஆரோக்கியமாக நலத்துடன் உள்ளது” என்று வனத்துறை துணை இயக்குநரும், களக்காடு சரணாலய காப்பாளருமான அதிகாரி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஜூன் 5 - 2023 அன்று தேனியில் பிடிபட்ட அரிக்கொம்பன் என்ற காட்டு யானை கடந்த வாரங்களில் பெரும் மாற்றத்தை அடைந்துள்ளது. கடந்த காலங்களில் தனது உணவிற்காக அரிசி மற்றும் பயிர்களை சாப்பிட்டு வந்த யானையானது காட்டுப் பகுதியில் விடப்பட்ட பின்பு 20 நாட்களாக மூணாறு வனப் பகுதி போன்ற வாழ்விடம் களக்காட்டிலும் உள்ளதால் நல்ல ஊட்டச்சத்துக்கள் உள்ள இயற்கையான உணவுகளை எடுத்துக் கொண்டும், சுதந்திரமாக உலாவியும் வருகிறது.

அரிக்கொம்பனை அருகில் உள்ள யானைக்கூட்டத்துடன் இணைக்க வனத்துறையினர் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். களக்காடு சூழலுக்கு ஏற்றவாறு யானையை பழக்கப்படுத்த வனத்துறை மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அரிக்கொம்பன் யானையை மேலக்கோதையார் பகுதியில் தினந்தோறும் கண்காணித்து வரும் முன்களப் பணியாளர்கள் யானை நல்ல ஆரோக்கியமாகவும், நல்ல நிலையிலும் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை தண்டையார்பேட்டை மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டுத் திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாம் (24.06.2023 சனிக்கிழமை) காலை 8.00 மணியளவில் செ 81 புதுவண்ணை டி.எச்.ரோட்டில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முகாமினை மாவட்ட கழகச் செயலாளர் தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, நேதாஜி யு.கணேசன், சர்ப ஜெயதாஸ், ஆகியோர் துவக்கி வைத்தனர். இம்முகாமில் மருத்துவதுறை உயர் அதிகாரிகள், அனைத்து சிறப்பு மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், மாநகராட்சி உயர் அதிகாரிகள், வருவாய்துறை அதிகாரிகள், ஆகியோர் பங்கேற்றனர். உடன் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பி.சதிஷ்குமார், பொன்இளவரசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், மா.நாகராஜ், நா.கோதண்டன், ச.தமிழ்செல்வன், ஜி.ஏழுமலை, மாமன்ற உறுப்பினர்கள் க.தேவிகதிரேசன், குமாரி நாகராஜ், மணிமேகலை ஏழுமலை, ரேணுகா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.